இந்திய உச்ச நீதிமன்றம்

பிப்ரவரி 03, 2022

மாண்புமிகு நீதியரசர் திரு .கே.எம்.ஜோசப்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு .ஹிரிஷிகேஷ் ராய்

உரிமையியல் மேல்முறையீட்டு எண்.3293 of 2012

என் . ராஜேந்திரன் - மேல்முறையீட்டாளர்

/எதிர்/

எஸ் . வள்ளி -எதிர் மேல்முறையீட்டாளர்

இந்து திருமண சட்டம்-1955-பிரிவு-13(1)(ia), 15-குடும்ப நீதிமன்றங்கள் சட்டம்-1984-பிரிவு-19, 20-காலவரையறைச் சட்டம்-1963-பிரிவு-29-கொடுமை-மீட்க முடியாத அளவு முடிவுற்ற திருமணம் - திருமணம் கலைப்பு - மேல்முறையீட்டாளர் வழக்குப்படி எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரை பிரிந்தும் மற்றும் அவரது பெற்றோர் வீட்டிற்கு திரும்ப சென்றுவிட்டார் - விவாகரத்து மனு மேல்முறையீட்டாளரால்தான் துன்புறுத்தல் காரணம் காட்டி தாக்கல் செய்துள்ளார் - குடும்ப நீதிமன்றம் விவாகரத்து மனுவை அனுமதித்துள்ளது - உயர்நீதிமன்றத்தில் பிரிவு-19 குடும்ப நீதிமன்ற சட்டங்களின் கீழ் எதிர்மனுதாரர் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் - மேல்முறையீட்டாளர் வாதமாக மேல்முறையீட்டுக்கான காலம் காலாவதி ஆகிவிட்டது என்றும் மற்றும் விவாகரத்து வழங்கி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை உறுதிப்படுத்தி மறுமணம் செய்து கொண்டார் - எதிர்மனுதாரர் பின்னிட்டு பிரிவு-9 இந்து திருமண சட்டத்தின் கீழ் தாக்கல் செய்த கலந்துறைவு உரிமைகளை மீட்டடைப்பு செய்ய கோரிய மனு நிலுவையில் இருந்து வந்தது - துன்புறுத்தல் எதுவும் இல்லை என்று முடிவு செய்து மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரருக்கு இடையில் வழங்கப்பட்ட திருமண கலைப்பு தீர்ப்பாணையை

உயர்நீதிமன்றம் மாற்றம் செய்துள்ளது - மேல்முறையீட்டின் முடிவு: குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் பிரிவு-19 ன் கீழ் விதிக்கப்பட்ட காலத்திற்குள் மேல்முறையீடு தாக்கல் செய்யப்படவில்லை என்று நீதிமன்றத்தை வற்புறுத்தியதில் மேல்முறையீட்டாளர் தோற்றுவிட்டார் - இந்து திருமண சட்டம் பிரிவு-15 க்கு முரண்பட்டு மேல்முறையீட்டாளரின் இரண்டாம் திருமணம் நடைபெற்றுள்ளது - உயர்நீதிமன்றம் சரியான முடிவை கண்டுள்ளது - எந்த துன்புறுத்தலும் இல்லை - மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரருக்கிடையில் நல்லுறவுக்கான சாத்தியம் இல்லை - மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரருக்கிடையிலான திருமணம் இறந்துவிட்டது - அரசியலமைப்பு சட்டம் உறுப்பு-142 ன் கீழான அதிகாரத்தை செயலுறுத்தி மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரருக்கிடையேயான திருமணம் கலைக்கப்பட்டு விளம்புகை செய்யப்பட்டது.

மேல்முறையீட்டின் முடிவில் நீதிமன்றத்தின் முடிவு

1) 1996 ம் ஆண்டு குடும்ப நீதிமன்ற நடைமுறை விதிகள் விதி-52-னினை பரிசீலிக்கும்போது சான்றிட்ட நகல் இல்லாத போதும் 30 நாட்களுக்குள் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடானது நிலைக்கத்தக்கது என்று மேல்முறையீட்டாளரின் வாதம் வைக்கப்பட்டது. மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் கூடுதல் வாதமாக பிரிவு-19 ஆனது உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் மீதேறி செயல்படும் என்றும் மற்றும் தீர்ப்பின் சான்றிட்ட நகல் அவசியம் இல்லை என்றும் எடுத்துரைத்த வாதம் குடும்ப நீதிமன்ற சட்டத்தின் பிரிவு-21 ன் தொடர்பாக மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தால் உருவாக்கப்பட்ட விதி-52-ற்கு உட்பட்டு முற்றிலும் ஏற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. பிரிவு-19 ல் கண்டுள்ள தடையுறுத்தா வாசகம் உண்மையில் மாறுபட்ட வாய்ப்புக்காக கூறப்பட்டது மற்றும் மேல்முறையீடு நிலைப்பதற்காக சட்டத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள அனைத்து தேவைகளையும் ஒரேடியாக துடைதெறிந்து விடுவதாக கருத கூடாது.[பத்தி 23]

2) பிரிவு-19(3)ன் கீழான மேல்முறையீட்டாளரின் வாதம் அடிப்படை அற்றது. காலவரையறைச் சட்டம் பிரிவு-29(2)-ற்கு சிறப்பு சட்டங்களும் உள்ளடக்கியதாகதான் பொருள் காணப்பட வேண்டும் அதிகரித்து வரும் சிறப்பு நிறுவனத்தின் மூலம் தரப்பினர்களுக்குள்

நல்லிணக்கம் அதிகளவில் செயல்படுத்தப்பட்டு கண்டிப்பாக தீர்வு காணப்பட வேண்டும் என்ற பெரும் உணர்தலில் அடிப்படையைத்தான் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் தன்னுள் கொண்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் சட்டம் பிரகடனப்படுத்துவதற்கு முன்பாக குடும்ப நீதிமன்றங்கள் உருவாக்கப்படாத போது அதிகாரம் பெற்ற நீதிமன்றங்களால் தான் சட்டப்பிரிவுகள் பயன்படுத்தப்பட்டிருக்கப்படும் குடும்ப நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டது மற்றும் அதனுடைய அதிகார வரம்பானது பிரிவு-7 ன் கீழ் செயல்படுத்தப்பட்டனவாக இருந்தபோதும் ஒரு நீதிமன்ற பார்வையில் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் உடன்பிறந்த மற்ற சட்டங்களுடன் படிக்கப்படவேண்டும். வேறுவார்த்தைகளில் கூறுவதனால் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் மட்டும் தனித்தது ஆகாது இந்து திருமணச் சட்டம் போன்ற சட்டங்களின் வாழ்வாதாரத்தில் இருந்து இவை வரையப்பட்டன. இந்தியாவில் இந்து திருமணச் சட்டத்திற்கு பின்னிட்டு குடும்ப நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதும் இந்து திருமணச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள காரணங்களை அவை கையாளுகின்றன என்பதும் இந்த காரணத்தினால் தான் மனு என்பது இந்த திருமணச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளவாறு பொருள் கொள்ளப்படுதல் வேண்டும். உண்மையில் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் பிரிவு-7-ஐ சாதாரணமாக பரிசீலிக்கையில் அது வழக்கு மற்றும் நடவடிக்கைகள் பற்றி பேசுவதை காட்டுகிறது. ஆகையால் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் பிரிவு-7 உடன் காலவரையறை சட்டம் பிரிவு-29 ஆகியவை "நடவடிக்கைகள்" என்ற பொருள் கொள்வதற்கு உட்பட்டு பிரிவு-29(3) வகையகங்களுக்கு உட்பட்டுள்ளதாகவே எங்களை பலப்படுத்துகிறது.[பத்தி 24]

3) இந்த நீதிமன்றம் பிரிவு-20 ஐ அடிப்படையாகக் கொண்ட வாதத்தில் எந்தத் தகுதியையும் காணவில்லை. வேறு எந்தச் சட்டத்திற்கும் முரண்பட்டு இருப்பினும் பிரிவு-20 குடும்ப நீதிமன்றச் சட்டத்திற்கு மேலெழுந்து செல்லும் விளைவை அளிக்கிறது, உண்மையில் மற்ற வகையகங்களின் மீது மேலெழுந்து செல்லும் விளைவை பிரிவு-20 கொண்டுள்ளது உண்மைதான் என்றாலும், பிரிவு-20-ஐ பயன்படுத்துவதற்கும், காலவரையறை சட்டத்தின் பிரிவு-12-ஐ நிராகரிப்பதற்கும் மேல்முறையீட்டாளர்

காலவரையறை சட்டத்தின் பிரிவு-29(2) பொருந்தாது என்றும், அதன் பயன்பாட்டை நீக்குவதில் முதலாவதாக வெற்றிபெற வேண்டும். எப்பொழுது குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் சிறப்பு கூறாக பிரிவு-19 ன் கீழ் சிறப்பு காலவரம்பு முறையை கொண்டிருந்தாலும் ஒருமுறை பிரிவு 29(2) பொருந்திவிட்டால் அதன் கீழ் காலவரையறை சட்டத்தின் பிரிவுகள்-4 முதல் 24 வரையிலானவை தானாக கொண்டுவரப்பட்டு விடுகின்றன. காலவரையறை சட்டத்தின் பிரிவு-12 வருங்கால மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பூர்வமாகக் கிடைக்கிறது. நீதியின் நலனுக்கும் உகந்தது. உண்மையில் ஒருபுறத்தில் எப்படி விதி-52 ன் வழியாக சான்றிட்ட நகல் மேல்முறையீட்டுடன் இணைத்திருக்க வேண்டும் என்று சட்டம் கட்டளையிடுவதும் மற்றும் திருமண கலைப்பு குறித்த முடிவை மீட்கும் செலவுத்தொகையுடன் வழக்கு தரப்பினர் பெறலாம் என்ற நிலையில் அவள் சான்றிட்ட நகல் இல்லாமல் மேல்முறையீடு செய்ய உரிமையில்லை என்பதும் மாறாக அசல் நீதிமன்றத்தில் வெற்றி பெற்ற தரப்பினர் காலவரையறை சட்டத்தில் கண்ட காலம் முடிவதற்கு முன்பாகவே மறுமணம் செய்துக்கொள்ள சுதந்திரமாக விடப்படுகிறார் என்பதும் புரிந்துகொள்ள முடியாததாக உள்ளது. [பத்தி 25]

4) காலவரையறை சட்டத்தின் பிரிவு-12, பிரிவு-29(2) மற்றும் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் பிரிவு-19 ஆகியவை எந்த வகையிலும் முரண்பட்டு அமையவில்லை. ஆகையால், பிரிவு-20 ன் வகையங்கள் காலவரையறை சட்டம் பிரிவு-12 ன் வகையங்களின் மீது மேலெழுந்து செல்கிறது அந்த வகையில் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு காலம் கடந்தது என்ற மேல்முறையீட்டாளர் வாதத்தின் எந்த தகுநிலையும் இல்லை.[பத்தி 26]

5) 09.09.2004 ம் தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மேல்முறையீடானது பிரிவு-15 க்கு உட்பட்டு தாக்கல் செய்யப்பட்டதாகவே பொருள்கொள்ளப்பட வேண்டும். விவாதங்களின் விளைவு தகுதியின் மேல் முடிவு செய்யப்பட்டவற்றை மேல்முறையீட்டாளரால் மாற்றி அமைக்கப்படவில்லை. குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் பிரிவு-19 ல் கண்டுள்ள காலவகையகங்களுக்கு உட்பட்டு மேல்முறையீடு தாக்கல் செய்யப்படவில்லை அல்லது

பிரிவு-15 ல் கண்டுள்ள காலவகையகங்களுக்கு உட்பட்டு மேல்முறையீட்டை தாக்கல் செய்யப்படவும் இல்லை என்ற வாதத்தில் மேல்முறையீட்டாளர் தோற்றுள்ளார். இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு-15 ன் வகையகங்களுக்கு மீறப்பட்டு மேல்முறையீட்டாளரால் சுட்டிக்காட்டப்பட்ட 2 வது திருமணம் நடைபெற்றுள்ளது மற்றும் உயர்நீதிமன்றம் மிகச் சரியாக முடிவு செய்துள்ளதை உறுதி செய்வதில் இந்நீதிமன்றம் எந்த தயக்கத்தையும் கொண்டிருக்கவில்லை.[பத்தி 27]

6) சொல்லப்பட்ட திருமணத்தின் மூலம் குழந்தை பிறந்துள்ளது என்பது நடந்து முடிந்துவிட்ட செயல் ஆகிறது. இது முற்றிலும் பிரிவு-15 க்கு முரண்பாடானது என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனாலும் அதே நேரத்தில் மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் கணவன் மனைவியாக கூடி வாழ்வதற்கான நியாயமான மனதால் உணரக்கூடிய சாத்திய கூறுகள் எதனையும் நாங்கள் உணரவில்லை. திருமணத்தில் எந்த ஒரு வாழ்க்கை கண்டுள்ளதோ கால விரையத்தால் அது முடிக்கப்பட்டுவிட்டது. புது தரப்பினர்கள் தோன்றலால் தரப்பினர்களுக்கு இடையேயான எந்த பிணைப்பும் முடிவடைந்துவிட்டது. முழுக்கமுழுக்க மேல்முறையீட்டாளரின் செயல்களால் மேல்முறையீட்டாளருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே நல்லிலக்கணம் ஏற்படுவதற்கான சிறிதளவு சாத்தியக்கூறுகளுக்கான காரணங்கள் இல்லை அதற்காக எதிர்மனுதாரரை குறை கூறமுடியாது. மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரருக்கும் இடையேயான திருமணம் இறந்துவிட்டது. வழக்கின் பொருண்மைகளிலிருந்து திரும்ப முடியாத புள்ளிக்கு மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரரின் உறவு சென்றுவிட்டது எந்தவொரு நியாயமான உறவுமுறையிலும் அவர்கள் இருந்து வாழ்வதற்கு சாத்தியக்கூறு இல்லை, இருவருக்கிடையேயான உறவு சரிசெய்ய முடியாத அளவிற்கு முறிந்துவிட்டது. இந்நீதிமன்றம் நீதியின் நலன் மற்றும் முழுமை நீதி செய்வதற்கு யோசித்து மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரருக்கிடையேயான திருமண கலைப்பு உத்தரவை பிறப்பிக்கிறது. [பத்தி 32]

லதா காமத் எதிர் விலாஸ் (1989) 2 SCC 613: [1989] 2 SCR 137; R. ஸ்ரீனிவாச குமார் எதிர் R. ஷமேதா (2019) 9 SCC 409: [2019] 12 SCR 873; முனிஷ் காக்கர் எதிர் நிதி காக்கர் (2020) 14 SCC 657 [2019] 15 SCR 169: சிவசங்கரன் எதிர் சாந்திமீனாள் (2021) SCC Online SC 702 – பார்க்க.

கனரா வங்கி, மும்பை எதிர் வார்டன் இன்சூரன்ஸ் கோ. லிட். (1952) Bom 1083; வித்யாசரன் சுக்லா எதிர் குப்சந்த் (1964) AIR 1099: [1964] SCR 6 129; Sm. சிப்ரா தேய் எதிர் அஜீத்குமார் தேய் AIR 1988 Cal 28; குட்டிமாலு எதிர் சுப்ரமணியன் (1981) KLT 602; குன்னாரத் யசோதா எதிர் மனதநாத் நாராயணன் AIR 1985 Ker 220; சந்தர் தேவ் எதிர் ராணி பாலா AIR 1979 Delhi 22-பார்க்க.

முன்தீர்ப்பு மேலாய்வுக்கு

[1989] 2 SCR 137	பார்க்க	பத்தி-19
[1989] 6 SCR 129	பார்க்க	பத்தி-19
[1989] 15 SCR 169	பார்க்க	பத்தி-30

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: மேல்முறையீட்டு எண்.3293/2012.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய 12.02.2010 ம் தேதியிட்ட C.M.A.No.3352/2004 ன் உத்தரவு மற்றும் தீர்ப்புரையின்

மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர்கள் கே.எஸ்.மகாதேவன், செல்வி.சுவாதி பன்சால், வருண் முத்கல், ரங்கராஜன், ஆர். ராஜேஷ் குமார்

எதிர்மனுதாரரின் வழக்கறிஞர்கள் கௌதம் நாராயன், செல்வி.அஸ்மிதா சிங்.

இந்த தீர்ப்பு நீதிபதி கே.எம்.ஜோசப் அவர்களால் பகரப்பட்டது

1) இந்து திருமண சட்டம்-1955, பிரிவு-13(1)(ia)ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரருக்கிடையேயான திருமண கலைப்பு தீர்ப்பாணையை உயர்நீதிமன்றம் மாற்றி அமைத்து பிறப்பிக்கப்பட்ட குறையுற்ற தீர்ப்பின் மீது இந்த மேல்முறையீடு.

2) மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கே.எஸ்.மகாதேவன் மற்றும் எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கௌதம் நாராயன் ஆகியோர்களின் வாதங்கள் கேட்கப்பட்டது.

3) 29.08.1999 ம் தேதி மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் இந்து சமய சடங்கு மற்றும் வழக்காறுகள் படி திருமணம் செய்துகொண்டனர். மேல்முறையீட்டாளின் கூற்றுப்படி ஒருவரை ஒருவர் திருமணம் செய்து கொண்ட அவரின் சகோதரிக்கும் எதிர்மனுதாரின் சகோதருக்கும் இடையில் ஏற்பட்ட சில வேறுபாடுகள் மேல்முறையீட்டாளரின் சகோதரி அவளின் பெற்றோர் வீட்டிற்கு திரும்ப வழி வகுத்தது. மேலும் எதிர்மனுதாரர் 18.01.2000 ம் தேதி மேல்முறையீட்டாளரை விட்டு பிரிந்து அவளின் பெற்றோர்கள் வீட்டிற்கு திரும்பி விட்டார். அவள் வீடு திரும்பவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் அவள் துன்புறுத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்டு திருமணம் கலைப்பு கேட்டு விவாகரத்து மனு 05.03.2001 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டது. 23.07.2004 ம் தேதி மேற்படி மனுவை குடும்ப நல நீதிமன்றம் அனுமதித்து தீர்ப்பாணை பிறப்பித்தது. குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் 1984 பிரிவு-19 ன் கீழ் மேற்படி தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு பிரதிவாதியால் மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் முன்பாக கொண்டு வரப்பட்டு 09.09.2004 ல் தாக்கல் செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளரின் கூற்றுப்படி எதிர்மனுதாரரால் மேல்முறையீட்டுக்கான காலம் முடிவடைந்ததால் அவர் 23.07.2004 ம் தேதியிட்ட திருமண கலைப்பு தீர்ப்பாணையின் அடிப்படையில் அவர் 31.10.2004 ம் தேதி மறுமணம் செய்து கொண்டார். இந்த விவகாரத்தில் அவருக்கு அறிவிப்பு மே மாதம் 2005 ல் சார்வு செய்யப்பட்டிருந்தது. உண்மையில் எதிர்மனுதாரர் கலந்துறை உரிமைகள் மீட்டடைப்பு கோரி இந்து திருமண சட்டம் பிரிவு-9 ன் கீழ் அவரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அது நிலுவையில் இருந்து வருகிறது.

4) மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கே.எஸ்.மகாதேவன் குடும்ப நீதிமன்ற தீர்ப்பை மாற்றி அமைத்ததில் உயர்நீதிமன்றம் தெளிவாக தவறிழைத்துள்ளது என்றும், மேலும் எதிர்மனுதாரரால் திருமண சார்ந்த கொடுமை இழைக்கப்பட்ட வழக்கு இது என்றும் எடுத்துரைத்தார். விசாரணை நீதிமன்றம் சாட்சியங்களை பரிசீலித்த பிறகு திருமண

கலைப்புக்கான காரணங்களை நியாயப்படுத்தி காரணங்களை கூறியுள்ளது என்றும், 29.08.1999 ம் தேதி மேல்முறையீட்டாளருக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெறுவதற்கு முன்பாகவே 24.05.1999 ல் மேல் முறையீட்டாளிரின் சகோதரியும், எதிர்மனுதாரரின் சகோதரரும் திருமணம் செய்து கொண்டது முக்கியமாக குறிப்பிடத்தக்கது என்றும், எதிர்மனுதாரருக்கும் மேல்முறையீட்டாளரின் சகோதருக்கும் இறுக்கமான உறவு இருந்து வந்தது என்றும், அதன் காரணமாக மேல்முறையீட்டாளருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையிலான உறவில் சொல்லக்கூடிய அளவு பாதிப்பு ஏற்படுத்தியது என்றும், விசாரணை நீதிமன்றம் சாட்சியங்களிலிருந்து குறிப்பிட்டு கூறியுள்ளது என்றும் எடுத்துரைத்தார். உண்மையில் 03.02.2001 ம் தேதி எதிர்மனுதாரரின் தந்தை இறந்துவிட்டார் என்றும், எதிர்மனுதாரர் தற்கொலை செய்து கொள்வதாக மிரட்டியதாகவும், கூடுதலாக எதிர்மனுதாரரை திரும்ப வந்துவிடுமாறு மேல்முறையீட்டாளர் வேண்டுகோள் செய்த பின்னிட்டும் வேண்டுகோளை மறுத்து அவள் குழந்தை பெற்றுக்கொள்ள இருப்பதால் 5 மாதம் கூடுதல் காலம் தேவைப்படுவதாக கோரியுள்ளார். மேலும் உண்மையிலேயே அவள் திரும்பி வந்து மேல்முறையீட்டாளருடன் தங்கியிருக்க ஆர்வம் கொண்டிருந்தால் அவ்வாறு மனு செய்திருப்பாள் என்றும், எதிர்மனுதாரர் கலந்துறைவு உரிமைகள் மீட்டடைப்பு கோரி எந்த மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பது எதிர்மனுதாரரால் ஒப்புக்கொண்டுள்ளதிலிருந்தும் அவரது செயல்பாடுகளிலிருந்தும் பிரதிபலிக்கிறது என்று வாதிட்டார். எதிர்மனுதாரருக்கும் அவரது அண்ணிக்கும் இடையில் இறுக்கமான உறவு இருந்தது இல்லை என்று உயர்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்று குறிப்பிட்டும் மேற்படி முடிவிற்கு மாறுபடும் விதமாக எதிர்மனுதாரர் ஒருபோதும் மேல்முறையீட்டாளருடன் சேர்ந்து வாழ விரும்பியதில்லை என்றும், எதிர்மனுதாரர் எப்போதும் சேர்ந்து வாழ தயாராகவும் விருப்பமாகவும் இருந்ததாகவும் உயர்நீதிமன்றம் கண்டுள்ள முடிவு பொருண்மையின் அடிப்படையில் நிலைக்கத்தக்கதல்ல என்று விமர்சித்தும், இது தொடர்பாக எதிர்மனுதாரரின் திரும்ப வந்துவிடுவதற்கான உள்நோக்கம் வழக்குரையில் பிரதிபலிக்கவில்லை என்றும் அது முதன்முதலாக எதிர்மனுதாரரின்

சாட்சியத்தில் மட்டுமே வெளிப்படுத்துததிலிருந்து கண்டறிய முடிகிறது என்றும் வாதிட்டார்.

5) கூடுதல் வாதமாக எதிர்மனுதாரர் தனது அனைத்து நகைகள் மற்றும் உடைமைகளை எடுத்து சென்றதை பொறுத்து பொருண்மையின் அடிப்படையில் குடும்ப நீதிமன்றம் எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளருடன் சேர்ந்து வாழ ஆர்வம் இல்லாமல் இருந்தார் என்று முடிவு செய்ததை அது ஊகத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ளது என்றும், நிலைக்கத்தக்கதல்ல என்றும் உயர்நீதிமன்றம் முடிவு செய்தது சிதைந்த ஒன்றாகும் என்றும் எந்த சாட்சியமும் அதனை துணை செய்யவில்லை என்றும், இரண்டு கருத்துகள் சாத்தியமாக இருக்கும் போது விசாரணை நீதிமன்றத்தின் பார்வையை உயர்நீதிமன்றம் மாற்றி இருக்க கூடாது என்றும் வாதிடப்பட்டது. மேலும் வாதமாக 18.01.2000 ம் தேதியிலிருந்து மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தனித்தனியாக வாழ்ந்து வருவதாகவும், 22 ஆண்டுகாலம் கடந்துவிட்டன என்றும் திருமணத்தின் புணிதம் இழக்கப்பட்டுவிட்டது என்றும், நீண்ட மற்றும் தொடர் பிரிவு காரணமாக திருமணமானது இன்றைய நாளில் சட்ட கற்பனையாக மட்டுமே உள்ளது என்றும், பழுதுபார்ப்பதற்கு அப்பால் சென்றுவிட்டது என்றும் திருமணத்தின் அடிமூலக்கூறே இல்லாமல் போய்விட்டது என்றும், ஆகையால் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு கண்டிப்பாக மாற்றி அமைக்கவேண்டும் என்றும் வாதிடப்பட்டது. அடுத்த வாதமாக எதிர்மனுதாரரால் பிரிவு-19 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு காலம் கடந்த ஒன்று என்றும், தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்ய 90 நாட்கள் அவகாசம் உள்ளது என்ற வாதத்தை உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ள நிலையில், மேல்முறையீடானது காலவரையறைச் சட்டம் பிரிவு-12 ன் வகையகங்களுக்கு உட்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற முடிவில் உயர்நீதிமன்றம் தவறிழைத்துள்ளது என்று குறிப்பிட்டு வாதிடப்பட்டது.

காலவரையறை சட்டம் பிரிவு -29(3)ன் கீழ் கண்டுள்ள முடிவில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதமாக உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் குறிப்பாக பிரிவு-19(1)ல் வகையங்கள் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் பிரிவு-19 ன் செயல்பாட்டினை தடுக்கும் வகையில் நிற்காது என்றும், பிரிவு-19 தன்னுள்ளேயே பிரிவு-20 ஆனது எந்த சட்டத்தினாலும் முரண்பட்டு இருப்பினும்

மேலெழுந்து செயல்படும் என்று குறிப்பிட்டு சாட்சியமாக அமைந்துள்ளது என்று வாதிட்டார். வேறு வார்தைகளில் கூறுவதானால் உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் ஒரு வழக்கு வருமானால் மேல்முறையீட்டோடு சான்றிட்ட நகல் சேர்த்திணைக்கப்பட வேண்டும் என்பது கட்டாயமானது என்றும், பிரிவு-19(1)-ஐ முறையாக பார்க்கும் போது மேற்படி மேற்கண்டவாறு தேவைகள் இல்லை என்றும் அவை வெளியேற்றபடுகின்றன. பிரிவு-19(1)ன் கீழ் கண்டுள்ள வகையகங்களுக்கு உட்பட்டு வேறு எந்த சட்டத்திலும் முரண்பட்டு இருப்பினும் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் மேலோங்கும் என்பதால் பிரிவு-19 ன் கீழ் 30 நாட்கள் காலம் எதிர்கால மேல்முறையீட்டாளரால் கடைபிடிக்க வேண்டும். ஆகையால் காலவரையறை சட்டத்தின் உதவியுடன் எந்த காலத்தையும் விளக்க மேல்முறையீட்டாளர் உரிமை பெற மாட்டார். உயர்நீதிமன்றம் காலவரையறை சட்டம் பிரிவு-29(2)-ஐ தவறாக அணுகியுள்ளது. திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பான சட்டமாக இது இருப்பதால் பிரிவு-29(3)ன் சதுர நான்கெல்லைகுள் சரியாக வருகிறது. அந்த வகையில் உயர்நீதிமன்றத்தின் முன்பான மேல்முறையீடு பிரிவு-19 ன் கீழான வழக்கின் மீதல்ல சரியாக பிரிவு-29(3)ன் கீழான நடவடிக்கையின் மீதானது, அவர் கூடுதலாக சமர்பித்ததாவது இந்நீதிமன்றத்தின் தீர்ப்பான *லதா காமத் எதிர் விலாஸ்* என்ற தீர்ப்பில் இந்து திருமண சட்டம் பிரிவு-28-ஐ விவாதித்துள்ளது என்றும் மேலும் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் பிரிவு-19 மற்றும் 20-ற்கான வித்தியாசங்களையும் பிரிவு-29(3)ல் சொல்லப்பட்ட வார்த்தையான "நடவடிக்கைகள்" ஆனது பிரிவு-19 ல் சொல்லப்பட்ட மேல்முறையீட்டை தழுவி நிற்கிறது. அவரது அடுத்த வாதமாக இந்து திருமணச் சட்டம் பிரிவு-15 ன் கீழான மேல்முறையீடு குறிப்பிட்ட காலத்திற்குள் "சமர்பித்தல்" செய்யப்பட வேண்டும். திரு. கே.எஸ்.மகாதேவன் கற்றறிந்த வழக்கறிஞரின் கூற்றுப்படி "சமர்பித்தல்" என்ற வார்த்தையானது பதட்டமான முறையில் பொருள் விளக்கம் செய்ய அனுமதிக்க கூடாது என்றும், இதனை சாதாரணமாக மேல்முறையீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தல் என்பதாக புரிந்துகொள்ளக்கூடாது என்று வாதிட்டார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் பிரிவு-15 ன் கீழான ஒரு மேல்முறையீடு சமர்பித்தல் என்பதன் பொருளாவது வெறும் தாக்கல் செய்தல் மட்டுமல்ல கூடுதலாக நகர்தப்பட்டு

நீதித்துறை தரப்பில் நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டும் என்பதாகும். 09.09.2004 ம் தேதியில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட போதிலும் அதற்கு முன்பாகவே தீர்ப்பாணையை நிறுத்தி வைக்க கோரும் மனுவில் 30.08.2004 ல் கையொப்பம் இடப்பட்டது என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. மேல்முறையீடு தயாராக வைக்கப்பட்டு வேண்டுமென்றே உடனடியாக அது தாக்கல் செய்யப்படவில்லை என்றும் 30.01.2004 ல் மேல்முறையீட்டாளர் மறுமணம் செய்து கொண்டார் என்பதை எந்த கணத்தில் எதிர்மனுதாரர் தெரிந்து கொண்டாரோ அவர் தடையுத்தரவுக்கான மனுவை 01.11.2004 ல் தாக்கல் செய்துள்ளார். ஆகையால் மேல்முறையீட்டாளர் மறுமணம் செய்து கொண்டாரா என்பதை அவள் வேண்டுமென்றே தெரிந்துகொண்டு பின்னிட்டு அவள் தடையுத்தரவுக்கான மனுவை 18.11.2004 ல் தாக்கல் செய்து தடையுத்தரவையும் அதே தேதியில் பெற்றுவிட்டார். எனவே தீர்ப்பாணையால் பாதிக்கப்பட்ட தரப்பினர் எப்போது மேல்முறையீடு செய்வார் என்பது தீர்மானிக்க சாத்தியம் இல்லாதது என்றும், எதிர்மனுதாரரின் நடத்தையிலிருந்தே அவருக்கு எந்த நிவாரணமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் வாதிடப்பட்டது.

6) இதற்கு மாறாக எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஸ்ரீ கௌதம் நாராயன் குறிப்பிட்டு கூறியதாவது எதுவாக இருந்த போதிலும் மேல்முறையீட்டாளர் திருமண கலைப்பு கோரி எந்த காலத்திலும் ஒரு வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றும், திருமணத்திற்கு பிறகு அவள் கருவுற்றால் இயற்கையாகவே அவளது பெற்றோர் வீட்டிற்கு சென்றாள். கருவுற்றல் சுமூகமாக இருக்கவில்லை சிக்கலாக தான் இருந்தது. அவள் தந்தை இறந்துவிட்டார். அவளது கட்டுபாட்டிற்கும் அப்பாற்பட்ட சூழ்நிலைகளால் அவள் அவளது பெற்றோரின் வீட்டில் தங்கியிருக்கவும் அதனால் அவரது திருமணம் மூலமான கடமைகளை நடுநிலைமையோடு எதையும் செய்யமுடியாமல் போனது என்று கூற இயலாது என்று குறிப்பிடபட்டது. குடும்ப நீதிமன்றத்தால் சாட்டப்பட்டுள்ள குற்றமான துன்புறுத்தல் என்பது சட்டவரைவாளர்களால் சொல்லப்பட்ட துன்புறுத்தல் என்ற காரணத்தின் கீழ் அமையவில்லை என்றும், குடும்ப நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட திருமண கலைப்பு தீர்ப்பாணைக்கு எந்த காரணமும் இல்லை என்றும், உயர்நீதிமன்றம் இந்த விவகாரத்தை

சூழ்நிலைகளுடன் முழுமையாக விவாதித்து துன்புறுத்தவில்லை என்ற சரியான முடிவுக்கு வந்துள்ளது. எதிர்மனுதாரர் முற்றிலும் குற்றமற்றவர். அவள் ஒரு ஆசிரியை. திருமணத்தின் மூலமாக மகன் ஒருவர் உள்ளார். மேல்முறையீட்டாளர் தனது சொந்த மகன் மீது எந்த அக்கறையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடதக்கது. காலவரையறை சட்டம் பிரிவு-29(3)ன் பொருத்தப்பாடு குறித்த கேள்விக்கு குடும்ப நீதிமன்ற சட்டம் பிரிவு -19 வகையமானது பிரிவு-29(2)ன் சிறப்பு வகையத்திற்கு உட்பட்டது என்றும், ஆகையால் பிரிவு-29(2) வழக்கிற்கு பொருந்தும் என்றும், பிரிவு-29(3)ல் கண்டுள்ள "நடவடிக்கைகள்" வார்த்தையானது வழக்கை ஒத்த நடவடிக்கைகளுக்கும் கட்டுப்பட்டது என்றும், அதன் பொருளாவது தரப்பினர்களால் கொண்டு வரப்படும் அசல் நடவடிக்கைகள் மற்றும் இந்த விஷயத்தில் மேற்கொள்ளப்படும் மேல்முறையீடு அல்ல என்று வாதிட்டார்.

7) அவர் கூடுதலாக இந்து திருமணச் சட்டத்தின் 15 வது பிரிவில் "சமர்பித்தல்" என்ற வார்த்தையில் பொருள் விளக்கம் குறித்து விவாதிக்கப்பட்டது, அவ்வார்த்தையில் எந்த தகுநிலையும் இல்லை என்றும் நீதிமன்றம் குற்றமற்ற எதிர்மனுதாரரின் அவல நிலை மற்றும் பொருண்மைகளையும், அவளது கணவர் திருமணத்திற்காக விரைந்துள்ள புனிதமற்ற அவசரத்தையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்றும் வாதிட்டார்.

8) குடும்ப நீதிமன்றத்தில் தீர்ப்பாணையை மாற்றி அமைத்ததில் உயர்நீதிமன்றம் தவறிழைத்துவிட்டதாக மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞரின் வாதத்தில் எந்த தகுநிலையும் இல்லை என்று நாங்கள் கருதுகிறோம். சந்தேகத்திற்கு இடமின்றி திருமணத்தை குறுகிய காலம் என்று சொல்வதாலேயே மேல்முறையீட்டாளர் மீது விழும் பழியின் சரியான பங்கிலிருந்து அவரை பிரித்தெடுக்காது என்றும் 29.09.1999 ல் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடந்து அவள் கருவுற்றதால் எதிர்மனுதாரர் அவளது திருமண வீட்டை விட்டு 18.01.2000 ம் தேதியில் பிரிந்து சென்றார் என்றும் 29.08.2000 ல் குழந்தை பிறந்தது என்றும், எதிர்மனுதாரரின் தந்தை பிப்ரவரி 2001 ல் இறந்தார் என்றும் வாதிடப்பட்டது.

9) மேல்முறையீட்டார் 05.03.2001 அன்று குடும்ப நீதிமன்ற முன்பாக மனுவை தாக்கல் செய்ததிலிருந்தே மேல்முறையீட்டாளர் எந்த அவசரத்தில் நடவடிக்கைகளை தொடங்கினார்

என்பது தெளிவாக தெரிகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் திருமண தேதியிலிருந்து 2 வருடங்களுக்கும் குறைவான காலத்திற்குள் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சந்தேகத்திற்கு இடமின்றி துன்புறத்தல் என்பது உடல் துன்புறுத்தலும் கூடவே மன துன்புறுத்தலும் ஆகும். இது ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகளின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டிய விஷயம் மேல்முறையீட்டாளரால் கொண்டு வரப்பட்ட இவ்வழக்கு எந்த அளவுகோலின் படி பார்த்தாலும் அடிப்படையற்றது என்று நாங்கள் கருதுகிறோம். இந்த வழக்கில் சாட்சியமான மேல்முறையீட்டாளர் அ.சா.1ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் எதிர்மனுதாரரின் பி.ச 1ன் வாய்மொழி சாட்சியம் அதற்கு அடுத்தபடியாக சான்றாவணங்கள் அ.சா.ஆ 1and அ.சா.ஆ 2 ஆகியவற்றிலிருந்து எதிர்மனுதாரருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்ட துன்புறுத்தல் குற்றத்திற்கான எந்த அறிகுறியும் தெரியவில்லை. உயர்நீதிமன்றம் துன்புறுத்தலுக்கான குற்றச்சாட்டிற்கு எந்த அடிப்படையும் இல்லை என்பதே தெளிவாக கண்டறிந்துள்ளது, எங்கள் முன்பு வலியுறுத்தப்பட்ட எதிர்மனுதாரர் மற்றும் மேல்முறையீட்டாளரின் சகோதரிக்கு இடையேயான இறுக்கமான உறவு ஆகியவையும் கூட இல்லை என்பதாக கண்டறிந்துள்ளது. மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரருக்கிடையிலான திருமண தேதிக்கு முன்பாகவே மேல்முறையீட்டாளரின் சகோதரிக்கு திருமணம் நடைபெற்றுள்ள நிலையில் அவர்களுக்குள் இறுக்கமான உறவு இருந்திருந்தால் முதலில் திருமணமே நடைபெற்றிருக்காது என்றும், மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரருக்கிடையேயான இறுக்கமான உறவால் துன்புறுத்தல் காரணம் உண்டானது என்பதை நம் புரிதலுக்கு அப்பாற்பட்டது. மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞரிடம் நம்முடைய வினவல் யாதெனில் அவரால் சுட்டிக்காட்டப்பட்ட எதிர்மனுதாரர் தற்கொலை செய்து கொள்வதாக மிரட்டினார் மற்றும் திரும்பி வர மறுத்தார் என்பதை தவிர வேறு எந்த காரணத்தையும், நிகழ்வையும் மேல்முறையீட்டாளரால் துன்புறுத்தலுக்கான குற்றச்சாட்டிற்கு சுட்டிக் காட்டப்படவில்லை. இது தொடர்பாக எதிர்மனுதாரர் கருவுற்று இருந்ததால் திரும்பி வரவில்லை என்பது மிகத் தெளிவாகிறது அதனால் அவள் அவளது பெற்றோரின் வீட்டிற்கு சென்றாள். இது இயற்கையானது.

ஏற்கனவே குறிப்பிட்டபடி கருவுறுதல் சுமூகமாக இருக்கவில்லை குழந்தை பிறப்புக்கு பின்னிட்டு மனைவி அவரது சொந்த பெற்றோர் வீட்டில் கூடுதல் காலம் இருக்க முடிவு செய்து இருந்தாலும் அது அவருடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது. எனவே இந்த மாதிரியான வழக்கு அதிலும் முக்கியமாக போதுமான கால அவகாசம் கூட காத்திருக்காமல் எப்படி நீதிமன்றத்தின் முன்பு கொண்டுவரப்பட்டது. மேல்முறையீட்டாளர் ஒரு குழந்தைக்கு தந்தை என்ற உண்மையைக் கூட தன் மனதில் கொண்டிருக்காமல் விவாகரத்து கோரி மனுவை நீதிமன்றத்தில் விரைந்து தாக்கல் செய்துள்ளார். 03.02.2001 அன்று எதிர்மனுதாரரின் தந்தை இறந்து விட்டார் என்பதை நாங்கள் மறந்து விடவில்லை. இந்த பொருண்மைகளை மனதில் கொண்டு எதிர்மனுதாரருக்கு எதிராக மேல்முறையீட்டாளரால் எடுத்துரைக்கப்பட்ட படி எந்த துன்புறுத்தலையும் அவள் செய்யவில்லை என்ற முடிவில் குறுக்கிடுவதற்கு எந்த காரணமும் தென்படவில்லை என்று நாங்கள் கருதுகிறோம். எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் தற்கொலை செய்து கொள்வதாக மிரட்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டுக்கு எந்த சாட்சியமும் இல்லை என்றும் குறிப்பிட்டு கூறியதும் மற்றும் அனைத்து திருமணங்களிலும் அல்லாத சாதாரணமாக பெரும்பாலான திருமணங்களில் நிகழும் கஷ்டம் மற்றும் கண்ணீருக்கு அப்பாற்பட்டு ஏதேனும் நிகழ்ந்துள்ளது என்பதற்கு நாங்கள் நம்பும் படியாக எந்த ஒரு சான்றுகளையும் முன்னிலைப்படுத்தவில்லை என்றே நாங்கள் கருதுகிறோம். எதிர்மனுதாரரின் துன்புறுத்தலின் காரணமாக திருமண கலைப்பு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதை நியாயப்படுத்த எந்த ஒன்றும் இல்லை .

10) மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞரின் அடுத்த வாதமாக பிரிவு-15-க்கு உட்பட்டும் 31.10.2004 அன்று மேல் முறையீட்டாளர் மறுமணம் செய்து கொண்ட விஷயமானது, இரண்டாவது திருமணம் சட்டப்படி நடைபெற்றது என்பதை நிச்சயமாக பரிசீலிக்கப்பட்டு தீர்க்கப்பட்டது. குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் பிரிவு-19 ல் கண்டுள்ள 30 நாட்கள் கடந்து 09.09.2004 அன்று மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 23.07.2004 அன்று குடும்ப நீதிமன்றம் தீர்ப்பாணையை பிறப்பித்துள்ளது. அதன் சான்றிட்ட நகலை

வேண்டி 31.07.2004 அன்று மனு தாக்கல் செய்து இருந்ததும் மற்றும் சான்றிட்ட நகலை பெறுவதற்கான காலத்தையும் நீக்குவதாக குறிப்பிட்டு மேல்முறையீடு குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. மேல்முறையீட்டாளரின் கூற்றுப்படி 19.08.2004 அன்று சான்றிட்ட நகல் தயாராகிவிட்ட நிலையில் எதிர்மனுதாரர் 30.08.2004 அன்று தடையுறுத்து மனுவில் கையொப்பம் செய்துள்ளார். 01.09.2004 அன்று மேல்முறையீடு தயார் செய்யப்பட்டுவிட்டது. 09.09.2004 அன்று மட்டுமே மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகையால் சான்றிட்ட நகல் பெறுவதற்கான காலம் நீக்கப்படுமானால், மேல்முறையீடானது உயர் நீதிமன்றம் கண்டபடி குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கருதலாம். காலவரையறை சட்டம் பிரிவு-12 ன் கீழான பாதுகாப்பை எதிர்மனுதாரர் பெற நீதிமன்றம் அனுமதிக்க கூடாது என்ற வாதத்தை மேல்முறையீட்டாளர் நியாயப்படுத்தினால், மேல்முறையீடானது காலவரையறைக்கு அப்பாற்பட்டதாகும் மற்றும் மேல்முறையீட்டாளரால் செய்து கொள்ளப்பட்ட இரண்டாம் திருமணம் முற்றிலும் சட்டபூர்வமானதாகும்.

11) மேல்முறையீட்டாளரின் மேற்படி வாதத்தை ஆராய 1955-ம் ஆண்டு இந்து திருமண சட்டம், பிரிவு-15 பார்ப்பது முக்கியமானது என்று நாங்கள் கருதுகிறோம். அதன்படி பிரிவு- 15 ஆனது கீழ்க்கண்டவாறு,

> "திருமணமுறிவுத் தீர்ப்பாணை ஒன்றால் மணமுறிவு ஏற்பட்டிருக்கும் போதும், தரப்பினர்கள் இருவரும் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய உரிமை இல்லாதிருக்கும் போதும், மேல்முறையீடு செய்ய உரிமை இருந்தும் மேல்முறையீட்டுக்குரிய காலவரையறை முடிவதற்கள் மேல்முறையீடு செய்யாதிருக்கும்போதும், மேல்முறையீடு செய்யப்பெற்று அது தள்ளுபடியாகியிருக்கும் போதும் தரப்பினர்கள் மீண்டும் திருமணம் செய்து கொள்வது சட்டபூர்வமானதாகும்."

12) குடும்ப நீதிமன்ற சட்டம் பிரிவு-19 இல் வகையங்கள் படிக்க கீழ்கண்டவாறு,

> " (1) உட்பிரிவு (2) இல் வகை செய்யப்பட்டவாறல்லாமல் மற்றும்

உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 ன்(5/1908) அல்லது குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 ன்(2/1974) அல்லது பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், பொருண்மைகள் மற்றும் சட்டம் ஆகிய இரண்டின்பேரிலும், ஒரு குடும்ப நீதிமன்றத்தின் ஒவ்வொரு தீர்ப்பிலிருந்தும் அல்லது வழக்கிடை ஆணையாக இல்லாத ஆணையிலிருந்தும் உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு ஒன்று உண்டு.

(2) தரப்பினர்களின் இசைவுடன், குடும்ப நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை அல்லது குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 இன் அத்தியாயம் IX இன்படி, பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றிலிருந்து மேல்முறையீடு எதுவும் கிடையாது.

வரம்புரையாக: குடும்ப நீதிமன்றங்கள் (திருத்தம்) சட்டம், 1991 ன்(59/1991) தொடக்கத்திற்கு முன்பு, குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 ன் (2/1974) அத்தியாயம் IX ன் படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதற்கும், அல்லது உயர்நீதிமன்றத்தின் முன்பு நடப்பில் உள்ள மேல்முறையீடு எதற்கும் இந்த உட்பிரிவில் உள்ள எதுவும் பொருந்துதல் ஆகாது.

(3) இந்தப் பிரிவின்படியான மேல்முறையீடு ஒவ்வொன்றும், ஒரு குடும்ப நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது ஆணைத் தேதியிலிருந்து முப்பது நாள் கால அளவுக்குள் முன்னிடப்படுதல் வேண்டும்.

(4) உயர் நீதிமன்றமானது, தாமே முற்பட்டோ அல்லது பிறவாறாகவோ குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 இன் அத்தியாயம் IX இன் படி பிறப்பிக்கப்பட்ட வழக்கிடை ஆணையல்லாத ஆணை ஒன்றை பிறப்பித்துள்ளதும் தனது அதிகாரவரம்பிற்குள் உள்ளதுமான குடும்ப நீதிமன்றத்தின் நடவடிக்கை எதனையும், அதன் சீர்மை, சட்ட முறைமை,

விதிமுறை பற்றி அது தெளிவுறக்காணும் நோக்கத்திற்காகவும் அந்த நடவடிக்கையின் ஒழுங்கு குறித்த பதிவணம் எதனையும் தருவித்து ஆய்வு செய்யலாம்.

(5) மேற்கூறப்பட்டுள்ளவாறு தவிர, ஒரு குடும்ப நீதிமன்றத்தின் தீர்ப்பு, ஆணை அல்லது தீர்ப்பாணை எதிலிருந்து நீதிமன்றம் எதற்கும் மேல்முறையீடு அல்லது மேலாய்வு எதுவும் கிடையாது."

13) குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் பிரிவு-20 யையும் சமமாக நாம் கருத்தில் கொள்ள அதன் வகைகள் கீழ்க்கண்டவாறு,

"இந்தச் சட்டத்தின் வகையங்கள், அப்போதைக்குச் செல்லாற்றிலுள்ள பிற சட்டம் எதிலும் அல்லது இந்தச் சட்டம் அல்லாத பிற சட்டம் எதனின் பயன் திறனால் செல்திறம் உடைய முறையாவணம் எதிலும், அடங்கியுள்ளதற்க முரணாக எது எவ்வாறியிருப்பினும், செல்திறம் உடையதாகும்."

14) மற்ற வகைகளான காலவரையறை சட்டம் பிரிவு-29 ன் கீழான வகையங்களையும் நாங்கள் கருத்தில் கொண்டோம். அவை கீழ்க்கண்டவாறு,

" 29. சேமிப்பு:- (1) இந்தச் சட்டத்தில் உள்ள எதுவும் இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872(9 ல் 1872) பிரிவு-25 ஐப் பாதிக்காது.

(2) ஏதேனும் ஒரு வழக்கு, மேல்முறையீடு அல்லது விண்ணப்பத்திற்காக ஏதேனும் ஒரு சிறப்பு அல்லது உள்ளூர் சட்டமானது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்திலிருந்து வேறுபட்ட வரம்புக் காலத்தை பரிந்துரைத்தால், பிரிவு 3 ன் விதிகள் அத்தகைய கால அட்டவணையால் பரிந்துரைக்கப்பட்ட காலமாக இருந்தால் மற்றும் எந்தவொரு சிறப்பு அல்லது உள்ளூர் சட்டத்தின் மூலம் எந்தவொரு வழக்கு, மேல்முறையீடு அல்லது விண்ணப்பத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட எந்தவொரு வரம்பும் காலத்தையும் தீர்மானிப்பதன் நோக்கம், பிரிவுகள் 4 முதல் 24 வரை

(உள்ளடக்க) உள்ள விதிகள், எந்த அளவிற்கு மட்டுமே பொருந்தும், அத்தகைய சிறப்பு அல்லது உள்ளூர் சட்டத்தால் வெளிப்படையாக விலக்கப்படவில்லை.

(3) திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பாக தற்போதைக்கு நடைமுறையில் உள்ள எந்தவொரு சட்டத்திலும் வேறுவிதமாக வழங்கப்பட்டுள்ளதைத் தவிர, இந்தச் சட்டத்தில் உள்ள எந்தவொரு சட்டத்தின் கீழ் எந்தவொரு வழக்கு அல்லது பிற நடவடிக்கைகளுக்கு பொருந்தாது.

(4) வரையறை பிரிவுகள் 25 மற்றும் 26 மற்றும் பிரிவு 2 ல் உள்ள "எளிமைப்படுத்தல்" என்பதன், 1882 (1882 இன் 5) இந்திய வசதியுரிமைகள் சட்டம், 1882 தற்போதைக்கு நீட்டிக்கக்கூடிய பகுதிகளில் எழும் வழக்குகளுக்குப் பொருந்தாது.

15) ஒருபுறம் மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் பிரிவு-19, பிரிவு-29(3) ஆகியவை வழக்கிற்கு பொருந்தும் என்றும், ஆகையால் கால வரையறை சட்டம் பொருந்தாது என்றும், காலவரையறை சட்டம் பொருந்தாத நிலையில் சான்றிட்ட நகல் பெறுவதற்காக மனு தாக்கல் செய்வதற்கு மற்றும் அதனைப் பெறுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலம் எதிர்மனுதாரால் கால வரையறையை கணக்கிடும் போது விலக்கிக் கொள்ள முடியாது என்றும் வாதிட்டார்.

16) மறுபுறம் எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதமாக பிரிவு-29(2) பொருந்தும் என்றும் வாதிட்டார். மற்றொரு கூட்டு வாதமான 09.09.2004 அன்று மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு இருந்தாலும் 09.09.2004 அன்று அதனை சமர்ப்பித்ததாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதை நாங்கள் கருத்தில் கொண்டோம்.

17) 1908 ம் ஆண்டு கால வரையறை சட்டத்தின் கீழான பிரிவு- 29(3)ன் முந்தைய வடிவம் கீழ்க்கண்டவாறு படிக்க,

"(3) (1869 இன் 4) 1869 ம் ஆண்டு இந்திய விவகாரத்து சட்டத்தின் கீழ் வரும்

வழக்குகளுக்கு இந்தச் சட்டத்தில் உள்ள எதுவும் பொருந்தாது."

18) இதன் பொருளாவது காலவரையறை எதுவும் இல்லை மற்றும் 1869 ம் ஆண்டு இந்திய விவாகரத்து சட்டத்தின் கீழ் விவாகரத்துக்கு கூறி தொடரும் வழக்கிற்கு காலம் வரையறை சட்டம் பொருந்தாது. 1908 ம் ஆண்டு கால வரையறை சட்டத்தின் மீதான மூன்றாவது சட்ட ஆணையம் இதில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்று கூறியது.

> "பத்தி 60. 1869 ம் ஆண்டு விவாகரத்து சட்டத்தின் கீழான வழக்குகளுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்று உட்பிரிவு(3) கூறுகிறது. திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பாக பார்சி திருமண மற்றும் விவாகரத்து சட்டம் மற்றும் சிறப்பு திருமண சட்டம் போன்ற சில சட்டங்களும் உள்ளன. 1869 ம் ஆண்டு விவாகரத்து சட்டத்தின் கீழான நடைமுறைகளை விலக்குவதற்கான காரணம் இந்த சட்டங்களுக்கும் சமமாய் பொருந்தி வரும். திருமணக் காரணம் தொடர்பான அனைத்து சட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் துணை பிரிவை பெருக்குமாறு குறிப்பாக பிரிவில் திருத்தம் வரையப்படும் போது சேர்க்கப்படலாம் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

19) திருமண சட்டங்களின் மீதான மேல்முறையீட்டுகளில் கால வரையறை சட்டம் பொருந்துமா? என என்ற வினாவானது முடிவு பெறாத தகராறு அல்ல. சந்தேகத்திற்கு இடமின்றி, இந்து திருமண சட்டத்தின் பிரிவு-28 ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளித்த மேலே கூறிய *லதா காமத்* என்ற வழக்கில் கீழ்க்கண்ட பத்தியை மட்டும் குறிப்பிடுவது அவசியம் என்று நாங்கள் கருதுகிறோம்.

> "12. இந்து திருமண சட்டத்தின் கீழான மேல்முறையீடு குறித்து காலவரையறை சட்டத்தின் அட்டவணையில் சொல்லப்படவில்லை ஆனால் இந்து திருமண சட்டத்தின் பிரிவு-28(4)ல் மட்டுமே அது சொல்லப்பட்டுள்ளது. ஆகையால் பிரிவு-28(4)ல் சொல்லப்பட்டுள்ள காலவரையறையானது காலவரையறை சட்டத்தின் அட்டவணையில்

சொல்லப்பட்டதிலிருந்து வேறுபட்டது. பிரிவு-29(2)ன் படி பிரிவு-4 முதல் 24 வரையிலான சொல்லப்பட்டுள்ள வகையங்களானது வெளிப்படையாக நீக்கப்பட்டால் ஒழிய அவை பொருந்தும். காலவரையறை சட்டத்தின் 4 முதல் 24 வரையிலான பிரிவுகளின் பொருந்துத் தன்மையை சட்டத்தில் உள்ள வகையங்கள் நீக்கவில்லை என்பது தெளிவாகிறது. ஆகையால் மேற்படி சொல்லப்பட்ட பிரிவுகள் பொருந்தாது என்று கூற முடியாது. இந்து திருமண சட்டத்தின் பிரிவு-28 ன் கீழான மேல்முறையீட்டில் பிரிவு-12 உட்பிரிவு(2)ல் சொல்லப்பட்டுள்ளவை பொருந்தும் என்பது தெளிவாகிறது. ஆகையால் தீர்ப்பின் சான்றிட்ட நகல் பெறுவதற்காக ஆகும் காலம் மேல்முறையீட்டு காலத்தை கணக்கிடுவதில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். டெல்லி உயர்நீதிமன்றத்தின் நீதியராயமானது சந்திரா தேவ், சந்தா என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு சொல்லி உள்ளது (AIR பிபி. 24-25)

இந்து திருமண சட்டம் ஒரு சிறப்பு சட்டம். சிறப்பு சட்டத்தில் மேல்முறையீட்டுக்கான கால வரையறை அதில் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி காலவரையறை 30 நாட்கள். இது 1963 ம் ஆண்டு காலவரையறை சட்டத்தின் முதல் அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள காலத்தில் இருந்து வேறுபட்டுள்ளது. ஆனால் முதல் அட்டவணையை பார்க்கும் பொழுது இந்து திருமண சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை அல்லது உத்தரவிற்கு எதிரான மேல்முறையீட்டிற்கு எந்த வகையங்களும் அதில் இல்லை. 1963 ம் ஆண்டு கால வரையறை சட்டம் பிரிவு-29(2)ன் கீழ் காணும் பொழுது முதல் அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள காலம் வேறுபட்டுள்ளது. மேலும் குறிப்பிட்ட நடைமுறைகளுக்கு கால வரையறை குறித்து கால வரையறை சட்டத்தில் குறிப்பிடாமல் விட்டிருப்பது தொடர்பாக சிறப்பு சட்டம் மற்றும்

காலவரையறை சட்டத்திற்கு இடையில் வேறுபாடு உருவாகும் போதும் மேற்படி பிரிவு அதனை சரி செய்கிறது. இதனை *கனரா பேங்க் பாம்பே எதிர் வார்டன் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்*, பாம்பே, AIR 19 பம்பாய் என்ற வழக்கில் இடப்பட்ட தீர்ப்பை உச்சநீதிமன்றம் *வித்யாசரண் சுக்லா எதிர் குப்சந்த்* என்ற வழக்கில் உறுதி செய்துள்ளது.

1963 ம் ஆண்டு காலவரையறை சட்டத்தின் பிரிவுகள் 3, 4 முதல் 24 வரையிலானவை பரிசோதிக்கப்பட்ட பின்னர் சிறப்பு சட்டத்திற்கும் பொருந்தும். இதன் விளைவாக இந்து திருமண சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட தீர்ப்பாணை மற்றும் உத்தரவின் மேல்முறையீட்டை விசாரிக்கும் நீதிமன்றம், சிறப்பு சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட 30 நாட்களுக்கு பிறகு மேல்முறையீடு செய்தால் காலவரையறை சட்டத்தின் கீழ் 3 வது பிரிவின் கீழ் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்ய அதிகாரம் கொண்டுள்ளது. அதேபோல பிரிவு-5 ன் கீழ் போதுமான காரணத்திற்காக காலதாமதத்தை மன்னிக்கும் அதிகாரமும் அதற்கு உண்டு. அதேபோன்று பிரிவு-12(2)ன் கீழ் மேல்முறையீடு செய்யப்பட்ட தீர்ப்பாணை அல்லது உத்தரவின் சான்றிட்ட நகலை பெறுவதற்கு ஆகிய நேரம் விளக்கப்படும் அப்படியானால் காலவரையறை சட்டத்தின் பிரிவு-12(2) முழுவதுமான பொருந்துகிறது. மேலும் மூன்று மேல்முறையீடுகளிலும் மேல் முறையீடு செய்பவர்கள் தீர்ப்பாணை மற்றும் உத்தரவின் சான்றிட்ட நகலை பெற ஆகும் காலத்தை விலக்கிக்கொள்ள உரிமை உண்டு அந்த வகையில் மேல்முறையீடு குறிப்பிட்ட காலத்திற்குள் அமைந்துள்ளது. இதே கருத்தை கல்கத்தா உயர்நீதிமன்றம் *திருமதி.சிப்ரா தேய்* வழக்கிலும் மற்றும் மத்தியபிரதேசம் உயர்நீதிமன்றம் *கான்டிபாய்* வழக்கிலும் கூறியுள்ளன. எனவே காலவரையறை சட்டத்தின் அடிப்படையில் எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞரால் முன்வைக்கப்பட்ட

வாதத்தில் எந்த அடிப்படையிலும் இல்லை என்பது தெளிவாகிறது.

20) இந்த விஷயம் குறித்து உயர்நீதிமன்றம் விரிவான அடிப்படையில் விவாதித்துள்ளதை நாங்கள் கவனிக்கிறோம். டெல்லி உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை தவிர கல்கத்தா நீதிமன்றத்தின் நீதியரசர் வழங்கிய தீர்ப்பான *திருமதி. சிப்ரா தேய் எதிர் அஜீத் குமார் தேய்* என்ற வழக்கில் இது குறித்து முழுமையாக பரிசீலித்து 1963 ம் ஆண்டு காலவரையறை சட்டத்தின் பிரிவு-29(3)ன் கொண்டுவரப்பட்ட மாற்றத்திற்கான காரணங்களை கூறியுள்ளதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

1908 ம் ஆண்டு காலவரையறை சட்டத்தின் பிரிவு-29(3)ன் கீழ் பாதுகாப்பு பெறாத திருமணம் தொடர்பான விஷயங்களில் சம்மந்தப்பட்ட இதர நபர்களையும் "நடவடிக்கைகள்" என்ற வார்த்தைகள் மூலம் காலவரையறை சட்டத்தின் பாதுகாப்பை நீட்டிக்க சட்டமன்றம் விரும்பியுள்ளது. இந்திய விவாகரத்து சட்டத்தின் கீழ் வருபவர்களும் 1908 ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு-29(3)ன் பாதுகாப்பை பெறுகிறார்கள். பகுத்தறிவின் பார்வையில் திருமணம் சம்மந்தமாக மணவாழ்வு உரிமைகள் மீட்டடைப்பு, விவாகரத்து, பாதுகாவல் நியமனம் போன்ற வழக்குகளில் காலவரையறையை நிர்ணயிப்பது இயல்பிலேயே மிகவும் பொருத்தமற்றது. இது நீதியின் நலனுக்கானதோ, தரப்பினரில் நலனுக்காகவோ அல்ல. ஆகையால் சமூகத்தின் நலனுக்கானதும் அல்ல. இந்தக் கொள்கையே சிறப்பு திருமணச் சட்டத்தின் கீழான நடவடிக்கைகள் மற்றும் பார்சி திருமண சட்டம் மற்றும் திருமணம் சம்மந்தமான இதர சட்டங்களிலும் நீட்டிக்கப்பட்டது. ஆனால் அசல் நடவடிக்கைகளிலிருந்து மேல்முறையீடு செய்யப்படும் போது முற்றிலும் மாறுபட்டதாக ஆகிறது. தரப்பினர்கள் மற்றும் சமூகத்தின் நலனுக்காக ஒரு கால வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ள போதும் அதற்குள்ளாக நீதித்துறையின் படிநிலையில் கீழ்மட்டத்தில் அமைந்துள்ள நீதிமன்றத்தின் தீர்ப்பு கேள்விக்குள்ளாகிறது. பிரிவு-29(3)ன் கீழ் சொல்லப்பட்டுள்ள "நடவடிக்கைகள்" என்ற வார்த்தையை நாம் மேலுறுதி செய்து கண்டிப்பாக புரிந்துகொள்ள வேண்டும் என்பது இந்நேரத்தில் குறிப்பிடத்தக்கது.

21) பிரிவு-29(3)ல் கண்டுள்ள சொற்களின் தன்மை வேறு விதத்தில் சொல்லப்பட்டிருப்பினும் "நடவடிக்கைகள்" என்ற வார்த்தையானது மேல்முறையீட்டையும்

தழுவி வருகிறது என்பதை சிந்திப்பதில் நாங்கள் எந்த சிரமும் பெற்றிருக்கவில்லை. எவ்வாராயினும் பிரிவு-29(3)ன் பின்னனி மற்றும் இது தொடர்பாக சட்டமன்றத்தின் வரலாற்றை பார்க்கையில் சட்டமன்றத்தின் நோக்கமானது நீதிமன்றத்தின் முன்பாக நடவடிக்கைகளை எடுப்பதாக தான் உள்ளது. உதாரணமாக இந்து திருமண சட்டத்தின் கண்டுள்ள பல பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களிலிருந்தே இதனை அறிய முடிகிறது. கல்கத்தா உயர்நீதிமன்றம் மேலே சொல்லப்பட்ட தீர்ப்புகளில் காலவரையறை சட்டத்தின் பிரிவுகள்-3,4,5,12,13,29,30 மற்றும் 31-களில் "மேல்முறையீடு" என்ற வார்த்தையானது வெளிப்படையாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை சரியாக உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளதை நாங்களும் கருத்தில் கொள்கிறோம். மிகவும் பொருத்தமானது என்னவென்றாலும் மற்றும் நம்முன் மையப்பிரச்சனையாக உள்ளது என்னவென்றாலும் பிரிவு-29 ஆனது தனக்குள்ளேயே ஒருபுறம் பிரிவு-29(2)ல் "மேல்முறையீடு" என்ற வார்த்தை வெளிப்படையாக பயன்படுத்தப்பட்டும், அதேசமயம் பிரிவு-29(3)ல் குறிப்பிடும் போது சட்டமன்றமானது மிக கவனமாக "நடவடிக்கைகள்" என்ற வார்த்தையை தேர்ந்தெடுத்துள்ளது. நிறுவனத்தை பொருத்த வரை "நடவடிக்கைகள்" என்ற வார்த்தையானது அதாவது வழக்கில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அசல் நடவடிக்கையில் மட்டும் பயன்படுத்தப்பட்டும் மேல்முறையீட்டில் பயன்படுத்தக்கூடாது என்றும், சட்டமன்றத்தின் நோக்கமாக இருந்து பயன்படுத்தப்பட்டதாக தெரியவில்லை. உண்மையில் கேரளா உயர்நீதிமன்றத்தின் தனி நீதிபதி வழங்கப்பட்ட *குட்டி மாலு எதிர் சுப்ரமணியன்* என்ற தீர்ப்பில் இது தொடர்பாக விவாதிக்கப்பட்டுள்ளதும், அவரின் பார்வையை கேரளா உயர்நீதிமன்றத்தின் முழு அமர்வு நீதிமன்றம் *குன்னாரத் யசோதா எதிர் மனதானத் நாராயணன்* என்ற வழக்கில் உறுதி செய்தும் உள்ள நிலையில் மேற்படி கேரளா உயர்நீதிமன்றத்தின் முழு அமர்வு நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பில் குறிப்பிடத்தக்க பத்திகள் கீழ்க்கண்டவாறு

> "16. காலவரையறை சட்டம் பிரிவு-29(3)ல் கண்டுள்ள "மற்ற நடவடிக்கைகள்" பொருள் குறித்த இரண்டாவது வாதத்தை குறித்து

குட்டி மாலு எதிர் சுப்ரமணியன் என்ற வழக்கில் சரியாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அதனை தொடர்ந்து *சந்திரா தேவ் எதிர் ராணி பாலா* என்ற வழக்கில் பிரிவு-29(3)ன் கீழான சட்டபூர்வமான தடையானது இயற்கையில் இரண்டும் ஒரே தன்மை கொண்ட வழக்கு மற்றும் "மற்ற நடவடிக்கைகளை" மட்டும் பொருத்தது என்றும், வேறுபடுத்தப்பட்ட வேறு வகையான மேல்முறையீட்டிற்கு அல்ல. AIR 1981 ல் NOC 221 என்ற வழக்கில் மாண்புமிகு நீதியரசர் பாலா கங்காதரன் நாயர் அவர்களால் எடுக்கப்பட்ட முடிவு மற்றும் நியாயப்படுத்ததில் நாங்கள் முழுமையான உடன்பாடு கொண்டுள்ளோம்.

17. எனவே இந்து திருமண சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட விவாகரத்துக்கான தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டால் அதாவது, சான்றளிக்கப்பட்ட நகல் பெறப்பட்டாலும், இல்லாவிட்டாலும் மற்றும் மேலமை நீதிமன்றமானது தீர்ப்பாணை பிறப்பித்த பிறகு அல்லது உத்தரவு தயாரானதுக்கு பின்னிட்டும் மூடப்பட்டிருப்பினும் மற்றும் மீதமுள்ள 30 நாட்களும் மூடப்பட்டிருப்பினும் தீர்ப்பாணை தேதியிலிருந்து 30 நாட்களுக்குள்ளாக கண்டிப்பாக தாக்கல் செய்யப்படவேண்டும் என்பது ஏற்கத்தக்கதல்ல. இந்து திருமண சட்டத்தின் பிரிவு-15 இருதரப்பாளரும் சில சூழ்நிலையில் மட்டும் மறுமணம் செய்துகொள்ளுவது சட்டப்பூர்வமானது என்று மட்டுமே விளம்புகிறது. இதிலிருந்து விவாகரத்து தீர்ப்பாணை பெற்ற தேதியிலிருந்து 30 நாட்களுக்கு பின்னிட்டு மறுமணம் செய்து கொள்ளும் உரிமை தானாக உறுதியாகிறது என்பதாக இது கூறவில்லை. மேல்முறையீடு செய்யப்பட்டால் அது தள்ளுபடி செய்யும் வரை காத்திருக்க வேண்டும். மேல்முறையீடு செய்வதற்கான உரிமை இருக்கும் பட்சத்தில் சான்றிட்ட நகல் பெறுவதற்காக ஆகும்

காலத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு தான் குறிப்பிட்ட காலத்திற்குள் மேல்முறையீடு செய்யப்படவில்லை என்றால மட்டுமே, மேல்முறையீடு செய்யப்படவில்லை என்று கருத வேண்டும். மேல்முறையீடு செய்வதில் காலதாமதத்தை மன்னிக்கும் பட்சத்தில் மேல்முறையீட்டிற்கான காலம் முடிந்துவிட்டதாகாது. 1897 ம் ஆண்டின் பொதுவகையங்கள் சட்டம் பிரிவு-10 ன் கீழ் காலத்தை கணக்கிடும் போது நீதிமன்றங்கள் அல்லது அலுவலகங்கள் மூடப்பட்டிருக்கும் நேரத்தை கடந்து 30 நாட்கள் நீட்டிக்கப்படும் என்றும், ஆகையால் பிரிவு-15 குறிப்பது யாதெனில் விவாகரத்து தீர்ப்பாணைக்கு பின்னிட்ட 30 நாட்களுக்கு பிறகு மறுமணம் செய்துகொள்வதற்கான உரிமை எழுகிறது என்பது சட்டத்தின் உள்நோக்கமாக இல்லை என்பது வெளிப்படுகிறது.

18. இந்து திருமண சட்டத்தின் பிரிவு-23(4) உறுதிபடுத்துவதற்காக கீழ்கண்டவாறு சொல்லப்படுகிறது.

திருமணத்தைக் கலைத்துத் தீர்ப்பாணை வழங்கும் வழக்கு ஒவ்வொன்றிலும் நீதிமன்றம் அவ்வழக்குத் தொடர்புடைய நகலைத் திருமணத் தரப்பினருக்கு இலவசமாக வழங்குதல் வேண்டும்.

விண்ணப்பதாரர் நகலை இலவசமாக பெறுவதற்கு உரிமை பெற்றுள்ள நிலையில், சான்றிட்ட நகலை பெறுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நேரத்தில் விலக்ககூடாது என்ற வாதம் முன்வைக்கப்பட்டதால் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு-363(1)ன் கீழ் எங்களது கவனம் ஈர்க்கப்பட்டது அது கீழ்க்கண்டவாறு :-

"எதிரிக்குச் சிறை தண்டனை அளிக்கப்படும் போது, அத்தீர்ப்பின் நகலொன்று, அத்தீர்ப்பு பகரப்பட்டதும், உடனடியாக அவருக்குக் கட்டணமின்றிக் கொடுக்கப்படுதல் வேண்டும்."

இந்து திருமண சட்டத்தின் பிரிவு-15 ஆனது விண்ணப்பதாரர் ஒரு நகலை

இலவசமாக பெறுவதற்கு மட்டுமே உதவுகிறது. ஆனால் நகலை வழங்கவேண்டிய நேரத்தை சட்டபூர்வமாக குறிப்பிடவில்லை. சான்றிட்ட நகலை பெறுவதற்கு ஆகும் காலத்தை விலக்கமுடியாது என்ற மேல்முறையீட்டாளரின் வாதத்தை பிரிவு-23(4) ஆனது முன்னிறுத்தவில்லை.

22) மேலே உள்ள பத்தி 18 ன் உள்ளடக்கங்களை எடுத்துக்கொண்டால், மேல்முறையீடு செய்வதற்கு சான்றிட்ட நகல் தேவையில்லை என்ற மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் ஸ்ரீ கே.எஸ்.மகாதேவனின் வாதத்தை மீண்டும் ஒரு சூழ்நிலையில் தீர்மானிக்க முடியும் என்று நாங்கள் காண்கிறோம். உயர்நீதிமன்றத்தால் சுட்டிகாட்டியுள்ளபடி குடும்ப நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் இலவச நகல் கொடுக்கப்பட வேண்டும் என்பது தேவையாக உள்ள போதும், மேல்முறையீடானது சான்றிட்ட நகல் இல்லாமல் முன்னிலைப்படுத்தப்படலாம் என்று முடிவு செய்வதிலிருந்து வேறுபட்டு உள்ளது. இது தொடர்பாக குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் பிரிவு-21 ன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளால் நாங்கள் மீண்டும் பலப்படுத்தப்பட்டுள்ளோம். சென்னை உயர்நீதிமன்றத்தால் உருவாக்கப்பட்ட 1996 ம் ஆண்டு குடும்ப நீதிமன்றங்கள் நடைமுறை விதிகளின் விதி-52 படிக்கு கீழக்கண்டவாறு :-

"மேல்முறையீட்டுடன் தீர்ப்பின் அல்லது உத்தரவின் நகல் தாக்கல் செய்யப்படவேண்டும் பிரிவு-19(1)ன் கீழான அனைத்து மேல்முறையீடுகளும் எந்த நீதிமன்றத்தால் தீர்ப்பு பகரப்பட்டதோ அந்த நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் சான்றிட்ட நகலுடன் சேர்த்து தாக்கல் செய்யப்பட வேண்டும்."

23) சான்றிட்ட நகல் இல்லாவிட்டாலும், மேல்முறையீடு 30 நாட்களுக்குள் தாக்கல் செய்தால் அது நிலைக்கத்தக்கது என்ற மேல்முறையீட்டாளரின் வாதத்தை நிராகரிக்க இது போதுமானது. பிரிவு-19 ஆனது உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவுகளுக்கு மேலெழுந்து செல்லும் என்ற மற்றும் தீர்ப்பின் சான்றிட்ட நகல் தேவையில்லை என்ற

மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞரின் கூடுதல் வாதம் உயர்நீதிமன்றத்தின் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் பிரிவு-21 தொடர்பாக உருவாக்கப்பட்ட விதி-52 ன் படி முற்றிலும் ஏற்கத்தக்கதல்ல என்று நாங்கள் முடிவு காண்கிறோம். பிரிவு-19 ல் கண்டுள்ள பொருந்தாத வகையமானது உண்மையில் வேறு நோக்கத்திற்காகவும், வாய்ப்பிற்காகவும் உள்ளது என்றும் மற்றும் மேல்முறையீட்டை நிலைநிறுத்துவதற்கான அனைத்து தேவைகளையும் ஒரேடியாக துடைந்தெறிந்துவிடுவதாக பொருள் கொள்ள முடியாது.

24) சமமாக பிரிவு-19(3)ன் அடிப்படையிலான மேல்முறையீட்டாளரின் வாதம் பொருளற்றது. காலவரையறை சட்டத்தின் பிரிவு-29(2) ஆனது இது சிறப்பு சட்டத்தை உருவாக்கியது. அதிகரித்து வரும் சிறப்பு நிறுவனத்தின் மூலம் தரப்பினர்களுக்குள் நல்லிணக்கம் அதிகளவில் செயல்படுத்தப்பட்டு கண்டிப்பாக தீர்வு காணப்பட வேண்டும் என்ற பெரும் உணர்தலில் அடிப்படையைத்தான் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் தன்னுள் கொண்டுள்ளது என்பது இங்கு கண்டிப்பாக குறிப்பிடத்தக்கது. மேலும் சட்டம் பிரகடனப்படுத்துவதற்கு முன்பாக குடும்ப நீதிமன்றங்கள் உருவாக்கப்படாத போது அதிகாரம் பெற்ற நீதிமன்றங்களால் தான் சட்டப்பிரிவுகள் பயன்படுத்தப்பட்டிருக்கப்படும். குடும்ப நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டது மற்றும் அதனுடைய அதிகார வரம்பானது பிரிவு-7 ன் கீழ் செயல்படுத்தப்பட்டனவாக இருந்தபோதும் ஒரு நீதிமன்ற பார்வையில் குடும்ப நீதிமன்றங்கள் சட்டத்துடன்பிறந்த மற்ற சட்டங்களுடன் படிக்கப்படவேண்டும். வேறுவார்த்தைகளில் கூறுவதனால் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் மட்டும் தனித்தது ஆகாது இந்து திருமணச் சட்டம் போன்ற சட்டங்களில் இருந்து இவை வரையப்பட்டன. இந்தியாவில் இந்து திருமணச் சட்டத்திற்கு பின்னிட்டு குடும்ப நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதும் இந்து திருமணச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள காரணங்களை அவை கையாளுகின்றன என்பதும் இந்த காரணத்தினால் தான் மனு என்பது இந்த திருமணச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளவாறு பொருள் கொள்ளப்படுதல் வேண்டும். உண்மையில் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் பிரிவு-7-ஐ சாதாரணமாக பரிசீலிக்கையில் அது வழக்கு மற்றும் நடவடிக்கைகள் பற்றி பேசுவதை காட்டுகிறது. ஆகையால் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம்

பிரிவு-7 உடன் காலவரையறை சட்டம் பிரிவு-29 ஆகியவை "நடவடிக்கைகள்" என்ற பொருள் கொள்வதற்கு உட்பட்டு பிரிவு-29(3) வகையகங்களுக்கு உட்பட்டுள்ளதாகவே எங்களது கண்டுபிடிப்பை பலப்படுத்துகிறது.

25) நாங்கள் பிரிவு-20 ஐ அடிப்படையாகக் கொண்ட வாதத்தில் எந்தத் தகுதியையும் காணவில்லை. வேறு எந்தச் சட்டத்திற்கும் முரண்பட்டு இருப்பினும் பிரிவு-20 குடும்ப நீதிமன்றச் சட்டத்திற்கு மேலெழுந்து செல்லும் விளைவை அளிக்கிறது, உண்மையில் மற்ற வகையகங்களின் மீது மேலெழுந்து செல்லும் விளைவை பிரிவு-20 கொண்டுள்ளது உண்மைதான் என்றாலும், பிரிவு-20-ஐ பயன்படுத்துவதற்கும், காலவரையறை சட்டத்தின் பிரிவு-12-ஐ நிராகரிப்பதற்கும் மேல்முறையீட்டாளர் காலவரையறை சட்டத்தின் பிரிவு-29(2) பொருந்தாது என்றும், அதன் பயன்பாட்டை நீக்குவதிலும் முதலாவதாக வெற்றிபெற வேண்டும். எப்பொழுது குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் சிறப்பு கூறாக பிரிவு-19 ன் கீழ் சிறப்பு காலவரம்பு முறையை கொண்டிருந்தாலும் ஒருமுறை பிரிவு 29(2) பொருந்திவிட்டால் அதன் கீழ் காலவரையறை சட்டத்தின் பிரிவுகள்-4 முதல் 24 வரையிலானவை தானாக கொண்டுவரப்பட்டு விடுகின்றன. காலவரையறை சட்டத்தின் பிரிவு-12 வருங்கால மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பூர்வமாகக் கிடைக்கிறது. நீதியின் நலனுக்கும் உகந்தது. உண்மையில் ஒருபுறத்தில் எப்படி விதி-52 ன் வழியாக சான்றிட்ட நகல் மேல்முறையீட்டுடன் இணைத்திருக்க வேண்டும் என்று சட்டம் கட்டளையிடுவதும் மற்றும் திருமண கலைப்பு குறித்த முடிவை மீட்கும் செலவுத்தொகையுடன் வழக்கு தரப்பினர் பெறலாம் என்ற நிலையில் அவள் சான்றிட்ட நகல் இல்லாமல் மேல்முறையீடு செய்ய உரிமையில்லை என்பதும் மாறாக அசல் நீதிமன்றத்தில் வெற்றி பெற்ற தரப்பினர் காலவரையறை சட்டத்தில் கண்ட காலம் முடிவதற்கு முன்பாகவே மறுமணம் செய்துக்கொள்ள சுதந்திரமாக விடப்படுகிறார் என்பதும் புரிந்துகொள்ள முடியாததாக உள்ளது.

26) காலவரையறை சட்டத்தின் பிரிவு-12, பிரிவு-29(2) மற்றும் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் பிரிவு-19 ஆகியவை எந்த வகையிலும் முரண்பட்டு அமையவில்லை.

ஆகையால், பிரிவு-20 ன் வகையங்கள் காலவரையறை சட்டம் பிரிவு-12 ன்

வகையங்களின் மீது மேலெழுந்து செல்கிறது அந்த வகையில் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு காலம் கடந்தது என்ற மேல்முறையீட்டாளர் வாதத்தில் எந்த தகுநிலையும் இல்லை என்பதாக நாங்கள் முடிவு செய்கிறோம்.

27) 09.09.2004 அன்று எதிர்மனுதாரரால் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதால் இந்து திருமணச் சட்டம் பிரிவு-5 ன் பொருளுக்கு உட்பட்டு இந்த மேல்முறையீடு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதாகவே கருதப்பட வேண்டும் என்ற மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் ஸ்ரீ கே.எஸ்.மகாதேவன் எடுத்துரைத்த கூடுதல் வாதத்தில் எந்த தகுநிலையும் இல்லை. உண்மையில் காலவரையறை சட்டத்தின் பிரிவு-3 ல் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையான "விருப்பம்" என்ற வார்த்தையை மேல்முறையீட்டில் பயன்படுத்துகிறது. பிரிவு-15 ல் சந்தேகத்திற்கு இடமின்றி "சமர்பிக்கப்பட்டது" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. திருமணம் கலைக்கப்பட்டது என்று விளம்புகை செய்யப்பட்டு தோல்வியடைந்த தரப்பினர் அதனை எதிர்த்து நடவடிக்கைகள் மேற்கொள்ள காலவரையறையை விதிப்பது தான் பிரிவு-15 ன் நோக்கமாக தரப்பட்டுள்ளது. மேலே சொல்லப்பட்ட *லதா காமத்* என்ற வழக்கில் பிரிவு-15 ல் "கலைக்கப்பட்டது" என்ற வார்த்தையை பயன்படுத்தி இருந்தாலும் நீதியின் நலன் பொருட்டு திருமணம் இல்லாநிலை மற்றும் செல்லாநிலை என்று வழங்கப்பட்ட வழக்கிலும் இதனைப் பயன்படுத்தலாம் என்று பொருள் விளக்கம் காணப்பட்டுள்ளது என்பதை நாங்கள் கருத்தில் கொள்கிறோம். ஆகையால், தோற்றுப்போன தரப்பினர் மேல்முறையீடு நீதிமன்றத்தில் எந்த நகர்வையும் எடுக்காத போதுதான் சட்டத்தின் படி திருமண கலைப்பு தீர்ப்பானையை செயலாக்கம் கொடுப்பதற்கு உட்கருத்தை கொண்டுள்ளது. மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞரின் வாதமான மேல்முறையீட்டாளர் மேல்முறையீடு மட்டும் தாக்கல் செய்து விடுவதோ அல்லது தயார் செய்வதோ அல்லது சமர்ப்பிப்பதோ தாக்கல் செய்ததாக ஆகாது அவர் கண்டிப்பாக நீதிமன்றத்தின் உடைய நீதித்துறை தரப்பில் மேல்முறையீட்டை கொண்டு வந்துள்ளதை உறுதி செய்ய வேண்டும் என்பது எந்த அடிப்படையும் அற்றது. எனவே 09.09.2004 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடானது பிரிவு-15 ன்

பொருளுக்கு உட்பட்டு தாக்கல் செய்யப்பட்டதாகவே நாங்கள் கருதுகிறோம். விவாதங்களின் விளைவு தகுதியின்பால் முடிவு செய்யப்பட்டவற்றை மேல்முறையீட்டாளரால் மாற்றி அமைக்கவில்லை. குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் பிரிவு-19 ல் கண்டுள்ள காலவகையகங்களுக்கு உட்பட்டு மேல்முறையீடு தாக்கல் செய்யப்படவில்லை அல்லது பிரிவு-15 ல் கண்டுள்ள காலவகையகங்களுக்கு உட்பட்டு மேல்முறையீட்டை தாக்கல் செய்யப்படவும் இல்லை என்ற வாதத்தில் மேல்முறையீட்டாளர் தோற்றுள்ளார். இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு-15 ன் வகையகங்களுக்கு மீறப்பட்டு மேல்முறையீட்டாளரால் சுட்டிக்காட்டப்பட்ட 2 வது திருமணம் நடைபெற்றுள்ளது மற்றும் உயர்நீதிமன்றம் மிகச் சரியாக முடிவு செய்துள்ளதை உறுதி செய்வதில் நாங்கள் எந்த தயக்கத்தையும் கொண்டிருக்கவில்லை.

28) கெடுவாய்ப்பாக, எவ்வாறாயினும், பொருண்மைகளின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தின் விசாரணை இதோடு முடிந்து விட வேண்டுமா? என்ற கேள்வி எழுகிறது. தரப்பினர்கள் பிரச்சனைக்கு அப்பாற்பட்டு 18.01.2000 முதல் தனியே பிரிந்து வாழ்கின்றனர். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் 22 ஆண்டுகளுக்கும் மேலாக தனியே வாழ்ந்து வருகின்றனர். பழிச்சொல்லுக்கு அப்பாற்பட்டு குறையுற்ற தீர்ப்பை உறுதிப்படுத்துவதில் நாங்கள் திருத்தி அடைய வேண்டுமா? தீர்ப்பில் குறிக்கிடாமல் விடுவது தரப்பினர்களை கணவன் மற்றும் மனைவியாக கூடி வாழ்வதற்கு உரிய சூழ்நிலையை உருவாக்குவதாக அமையாது என்றும் கூடுதலாக என்னவென்றால் இரண்டாவது மனைவி மற்றும் 25.02.2004 அன்று பிறந்த மகன் வடிவிலும் மூன்றாம் தரப்பினர் தோன்றியிருக்கிறார்கள் என்றும் அந்த திருமணம் அப்படியே உள்ளது என்றும் மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞரின் வாதத்தை நாங்கள் கேட்க வேண்டுமா? என்பதாகும் இரண்டாம் திருமணத்தில் இருந்து மேல்முறையீட்டாளருக்கு மகன் பிறந்துள்ளார் அந்த திருமணம் சந்தேகத்திற்கு இடமின்றி பிரிவு-15-ஐ மீறிய ஒன்றாகும்.

குடும்ப நீதிமன்றத்தால் திருமண கலைப்பு தீர்ப்பை பிறப்பிப்பதற்கு முன்பாகவே மேல்முறையீட்டாளருக்கு இரண்டாம் திருமணத்தின் மூலம் மகன் பிறந்து விட்டார் என்று

எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் இங்கே சுட்டி காட்டினார்.

29) சந்தேகத்திற்கு இடமின்றி, அரசியலமைப்பின் 142 வது உறுப்பான அதீத சக்தியின் அடிப்படையில் தரப்பினர்கள் முழுமையான நீதியை எட்டும் வகையில் உத்தரவுகள் பிறப்பிப்பதற்கு இந்நீதீமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. மீட்க முடியாத அளவு முடிவுற்ற திருமணம் தொடர்பாக இந்நீதிமன்றம் கருதும்போது, சந்தேகத்திற்கு இடமின்றி, இது தொடர்பாக சட்ட ஆணையம் சட்டத்தில் மாற்றங்களை பரிந்துரைத்திருந்தாலும், இன்றைய நிலவரப்படி, விவாகரத்திற்கு, மீட்க முடியாத அளவு முடிவுற்ற திருமணம் ஒரு காரணமாக இல்லை. எனினும் இந்நீதிமன்றம் பல்வேறு நிகழ்வுகளில் உறுப்பு-142 ன் அதிகாரத்தை பயன்படுத்தி மீட்க முடியாத அளவிற்கு முடிவுற்ற திருமணத்தை காரணமாக கொண்டு திருமண கலைப்பு உத்தரவை வழங்கி உள்ளது. இது தொடர்பாக எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் உயர்நீதிமன்றத்தின் முடிவை உறுதிப்படுத்துவதாக இருப்பின் உறுப்பு-142 ன் அதிகாரத்தை பயன்படுத்துவதாக இந்த வழக்கு அமையாது என்றும் கூறி மேல்முறையீட்டாளரின் நடத்தையை அவர் எங்களுக்கு நினைவுறுத்தினார். மேலும் எதிர்மனுதாரர் முழுவதும் குற்றமற்றவர் என்றும் எனவே இந்த வழக்கில் உறுப்பு-142 ன் அதிகாரத்தை பயன்படுத்துவதற்கு அவசியம் இல்லை என்றும் எடுத்துரைத்த அவருடைய வாதத்தை நாங்கள் முன்னோடி குறிப்பாக குறித்துக் கொள்கிறோம். இதன் மூலம் இவ்வழக்கு தரப்பினர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட மீட்க முடியாத அளவுக்கு முடிவுற்ற திருமணம் என்ற காரணத்தின் அடிப்படையில் திருமண கலைப்புக்கான வழக்கு அல்ல. ஆனால் மீட்க முடியாத அளவில் முடிவுற்ற திருமணத்தின் காரணமாக திருமண கலைப்பிற்கு தரப்பினர்களின் ஒப்புதல் அவசியமாம் என்ற கேள்வி எழுகிறது இது முடிவுறா தகராறு அல்ல. இது தொடர்பாக இந்நீதிமன்றம் பல முடிவுகளை அலசி ஆராய்ந்துள்ளது .

ஆர். சீனிவாச குமார் எதிர் ஆர்.ஷேமதா என்ற வழக்கில் கண்டுள்ள விவாதம் மற்றும் முடிவை குறிப்பிட நாங்கள் கருதுகிறோம் அதன்படி கீழ்க்கண்டவாறு,

"7. இப்போது எதிர்மனுதாரரின் மனைவியின் சார்பாக சமர்ப்பித்துள்ளபடி இருதரப்பினரின் ஒப்புதல் இல்லாவிட்டால் இந்திய அரசியலமைப்புச்

சட்டத்தின் உறுப்பு-142 ன் அதிகாரத்தை பயன்படுத்தி கூட மீட்க முடியாத அளவிற்கு முடிவுற்ற திருமணம் என்ற காரணத்தின் அடிப்படையில் திருமண கலைப்பை வழங்க முடியாது என்ற வாதத்தில் எந்த பொருளும் இல்லை. திருமணத்தின் இருதரப்பினரும் நிரந்தரமாக பிரிவதற்கு அல்லது விவாகரத்து பெறுவதற்கு ஒப்புக்கொண்டால் நிச்சயமாக இருதரப்பினரும் பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையில் திருமண கலைப்புக்காக விவாகரத்து கோரி உரிய அதிகாரம் பெற்ற நீதிமன்றத்தை நாடலாம். வழக்கின் சூழ்நிலைகளை ஆராய்ந்த பின்னிட்டு, எப்பொழுது ஒரு தரப்பினர் ஒப்புக்கொள்ளவில்லையோ அப்போதுதான் தரப்பினர்களுக்கு இடையே கணிசமான நீதியை வழங்க இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு-142 ன் கீழான அதிகாரத்தை பயன்படுத்துவதற்கு தேவை எழுகிறது. இருப்பினும், அதே நேரத்தில், மனைவியின் நலனும் நிதி ரீதியாக பாதுகாக்கப்பட வேண்டும், அப்பொழுதுதான் அவள் எதிர்காலத்தில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட வேண்டியதில்லை மற்றும் அவள் மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டியதில்லை.''

30. முனிஷ் காக்கர் எதிர் நிதி காக்கர் என்ற வழக்கில் இந்நீதிமன்ற தீர்ப்பை நாம் கவனிக்கலாம் அது பின்வருமாறு,

"18. எங்கள் முன்பாக சமர்ப்பிக்கபட்டதிலிருந்து, இருதரப்பினரும் ஒன்றாக சிறப்பான முறையில் வாழலாம் என்பதை மறந்து தனித்தனியே வாழ்ந்து வருகின்றனர். உண்மையில், தரப்பினர்கள் ஒப்புக்கொள்ளவில்லை, எதிர்மனுதாரர் கூட ஒன்றாக வாழ்வதற்கு ஒப்புக்கொள்ளவில்லை, அவர்களுக்குள் கசப்பான அனுபவம் மட்டுமே இருந்து வருகிறது அந்த கசப்பான அனுபவம் எதிர்மனுதாரரை மேல்முறையீட்டாளர் விவாகரத்து பெற்று அவர் அவரது வாழ்க்கையை தனியே வாழ அனுமதிக்க கூடாது என்ற அளவுக்கு

நீட்டித்துள்ளது. இதிலிருந்து எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளவில்லை என்பது சந்தேகத்திற்கு இடமின்றி தெரிய வருகிறது".

31. சிவசங்கரன் எதிர் சாந்திமீனாள் என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை நாம் கவனிக்கலாம் அது பின்வருமாறு,

"19. முதல் நாளில் இருந்தே நடக்காத திருமணத்தை நாங்கள் எதிர்கொள்கிறோம் திருமணம் முடிவுடையாமலேயே தரப்பினர்கள் திருமண தேதியில் இருந்து சுமார் 20 வருடங்கள் தனியே பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். விசாரணை நீதிமன்றத்தில் 5 ஆண்டு காலம் கழித்து விட்டு விவாகரத்து தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டவுடன் மேல்முறையீட்டாளரால் 6 வருடத்திற்கு பின்பு மறுமணம் செய்துள்ளார். அனைத்து மத்தியஸ்த முயற்சிகளும் தோல்வி அடைந்தன."

20. விசாரணை நீதிமன்றம் கண்டுள்ளபடி, மேலே சொல்லப்பட்ட சட்ட நிலைகளில் இருந்து மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக எழவில்லை என்றாலும், எதிர்மனுதாரரின் மேற்படியான தொடர் செயல்கள் கொடுமைக்கு இட்டு சென்றுள்ளது. இந்த நடத்தை திருமண ஒற்றுமையை குலைக்கிறது மற்றும் திருமணத்தை சிதைக்கிறது. உண்மையில், ஆரம்பத்தில் எந்த ஒற்றுமையும் இல்லாததால் பின்னிட்டு எந்த சிதைவிற்கும் வழி வகுக்கவில்லை. உண்மையில், தொடர் குற்றச்சாட்டுகளும் மற்றும் தொடர் சட்ட நடவடிக்கைகளும் தான் இங்கு துன்புறுத்தலாக அமைந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. துவக்கத்தில் இருந்தே திருமணம் இருந்ததில்லை என்பதும் மற்றும் ஐந்தாண்டு காலம் விசாரணை நீதிமன்றத்திலும், விவாகரத்து தீர்ப்பானை பிறப்பிக்கப்பட்டவுடன் ஆறு நாட்களுக்குள்ளாக திருமணத்தின் ஆரம்பத்தில் இருந்து ஆறு வருடங்களுக்குப் பின் மறுமணம் செய்து கொண்டார் என்ற நடத்தை மேல்முறையீட்டாளருக்கு எதிராக அமைந்துள்ளது.

21. மேற்கூறிய அனைத்து பொருண்மைகளையும் பார்க்கையில், மீட்க முடியாத அளவு முடிவுற்ற திருமணத்தின் காரணமாகவும் மற்றும் பின்னிட்ட பொருண்மைகளின் அடிப்படையில் துன்புறுத்தல்

காரணமாகவும் மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக விவாகரத்து தீர்ப்பாணையை பிறப்பிக்க இது ஒரு தகுந்த வழக்காகும்.

22. ஆகையால், இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுப்பு-142 ன் அதிகாரத்தை பயன்படுத்தி இருதரப்பினருக்கும் இடையில் திருமணக் கலைப்பு உத்தரவை மீட்க முடியாத அளவு முடிவுற்ற திருமணம் என்ற காரணத்தின் அடிப்படையிலும் கூடுதலாக பிரிவு-13(1)(ia)ன் கீழ் வழக்கு நடவடிக்கைகள் நிலுவையில் இருந்த பல்வேறு நிலைகளில் எதிர்மனுதாரரின் பின்னிட்டு நடத்தை துன்புறுத்தல் என்ற காரணத்தின் அடிப்படையிலும் கொண்டுள்ளதாக நாங்கள் கருதுகிறோம்.

32) திருமணக் கலைப்பு விளம்புகை செய்வதற்கு தரப்பினர்களின் ஒப்புதல் அவசியம் இல்லை என்று நாம் கண்டுவிட்ட பிறகு, உண்மையில், பொருண்மையின் அடிப்படையில் அவர்களுக்குள் நிகழ்ந்த நிகழ்வை நாம் கருதாமல் இருக்க முடியாது. 31.10.2004 அன்று திருமணம் நடைபெற்றுள்ளது. அந்த திருமணத்தின் மூலம் குழந்தை பிறந்துள்ளது என்பது நடந்து முடிந்துவிட்ட செயல் ஆகிறது. இது முற்றிலும் பிரிவு-15 க்கு முரண்பாடானது என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனாலும் அதே நேரத்தில் மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் கணவன் மனைவியாக கூடி வாழ்வதற்கான நியாயமான மனதால் உணரக்கூடிய சாத்திய கூறுகள் எதனையும் நாங்கள் உணரவில்லை. திருமணத்தில் எந்த ஒரு வாழ்க்கை கண்டுள்ளதோ அது காலவிரையத்தால் முடிக்கப்பட்டுவிட்டது. புது தரப்பினர்கள் தோன்றலால் தரப்பினர்களுக்கு இடையேயான எந்த பிணைப்பும் முடிவடைந்துவிட்டது. முழுக்கமுழுக்க மேல்முறையீட்டாளரின் செயல்களால் மேல்முறையீட்டாளருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே நல்லிலக்கணம் ஏற்படுவதற்கான சிறிதளவு சாத்தியக்கூறுகளுக்கான காரணங்கள் இல்லை அதற்காக எதிர்மனுதாரரை குறை கூறமுடியாது. மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரருக்கும் இடையேயான திருமணம் இறந்துவிட்டது. வழக்கின் பொருண்மைகளிலிருந்து திரும்ப முடியாத புள்ளிக்கு மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரரின் உறவு சென்றுவிட்டது. எந்தவொரு

நியாயமான உறவுமுறையிலும் அவர்கள் கூடி வாழ்வதற்கு சாத்தியக்கூறு இல்லை, இருவருக்கிடையேயான உறவு சரிசெய்ய முடியாத அளவிற்கு முறிந்துவிட்டது. நாங்கள் நீதியின் நலன் மற்றும் முழுமை நீதி செய்வதற்கு யோசித்து மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரருக்கிடையேயான திருமண கலைப்பு உத்தரவை பிறப்பிக்கிறோம்.

33) எங்களின் இந்த முடிவு, மேல்முறையீட்டாளரின் நடத்தைக்கு நாங்கள் ஒப்புதல் அளித்ததன் அடிப்படையிலோ அல்லது எதிர்மனுதாரரின் நடத்தை மீதான தீர்ப்பின் அடிப்படையிலோ அல்ல என்பதை நாங்கள் தெளிவுபடுத்துகிறோம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், எதிர்மனுதாரர் இந்த விஷயத்தில் குற்றமற்றவர் என்பதை நாங்கள் காண்கிறோம், ஆனால் அவர்கள் வெளிப்படுத்திய உண்மைகள் மற்றும் நடந்த முன்னேற்றங்கள், திருமணத்தை கலைப்பதை நீதியின் நலனுக்கான சிறந்த பாதையாகக் கருதுவதைத் தவிர்க்க முடியாததாகிறது.

34) இதன்படி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நாங்கள் உறுதி செய்தும் எதிர்மனுதாரரின் துன்புறுத்தலை காரணமாக கொண்டு பிறப்பித்த திருமண கலைப்பு தீர்ப்பாணையை மறுத்தும் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் உறுப்பு-142 ன் கீழான அதிகாரத்தை நாங்கள் செயல்படுத்தி மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரரருக்கு இடையேயான திருமணத்தை கலைப்பு செய்து விளம்புகை செய்கிறோம். இன்றிலிருந்து எட்டு வார காலத்திற்குள்ளாக எதிர்மனுதாரரின் பெயருக்கு வரைவோலை மூலமாக ரூ.20,00,000/- (இருபது லட்சத்தை) வழங்க வேண்டும் என்று மேல்முறையீட்டாளருக்கு நிபந்தனை விதிக்கின்றோம். சொத்து உரிமை தொடர்பாக மேல்முறையிட்டாளருக்கும் எதிர்மனுதாரருக்கும் பிறந்த மகனுக்கு சட்டப்படியாக கிடைக்கும் அனைத்து உரிமைகளும் எவ்வித பாரபட்சமும் இன்றி அவருக்கு கிடைக்கத்தக்கது என்பதை நாங்கள் மேலும் தெளிவுபடுத்துகிறோம். மேலே சொல்லப்பட்ட தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்தும் வரை மாதந்தோறும் ரூபாய்.7,000/-(ஏழாயிரத்தை) எதிர்மனுதாரருக்கு மேல்முறையிட்டாளர் தொடர்ந்து செலுத்தி வர வேண்டும்.

35. மேலே சொன்னபடி இந்த மேல்முறையீடு தீர்க்கப்படுகிறது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."